0 0 0 0

தினமணி 07.04.22

திண்டுக்கல்: ரெட்டியார்சத்திரம் அருகே தனியார் குவாரிக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக வியாழக்கிழமை நடைபெற இருந்த கருத்து கேட்புக் கூட்டம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் ச. விசாகன் தெரிவித்துள்ளதாவது:

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் அடுத்துள்ள கொத்தப்புள்ளி கிராமத்தில் அமைக்கப்படவுள்ள தனியார் நிறுவனத்தின் குவாரி தொடர்பாக பொதுமக்களுடனான கருத்து கேட்புக் கூட்டம் வியாழக்கிழமை (ஏப்.7) நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது தொடர்பான இந்த கருத்து கேட்புக் கூட்டம், நிர்வாகக் காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

தினகரன் 07.04.2022
பக்கம் - 4

ரெட்டியார்சத்திரத்தில்

## கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், ஏப். 7: திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் விசாகன் தெரிவித்ததாவது:

திண்டுக்கல் மேற்கு தாலுகா கொத்தப்புள்ளி கிராமத்தில் சபானா பர்வீன் ரப்ஸ்டோன் குவாரி என்ற நிறுவனம் அமைவதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டம் இன்று ஏப் 7ம் தேதி முற்பகல் 11 மணிக்கு ரெட்டியார்சத்திரம் அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற இருந்தது. நிர்வாக காரணங்களால் பொதுமக்கள் கேட்பு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

தினத்தந்தி 07.04.2022
பக்கம் 2

கொத்தப்புள்ளி கிராமத்தில் குவாரி அமைக்க

## இன்று நடைபெற இருந்த கருத்துக்கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு

திண்டுக்கல், ஏப்.7-

திண்டுக்கல் மேற்கு தாலுகா கொத்தப்புள்ளி கிராமத்தில் குவாரி அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு, ரெட்டியார்சத்திரம் அண்ணாமலை செட்டியார் திருமண மண்டபத்தில் இன்று (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெற இருந்தது. இந்த கருத்துக்கேட்பு கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் விசாகன் தெரிவித்துள்ளார்.